செ.வெ.எண்: 35/ஜுலை நாள் : 17.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் வருகின்ற 21.07.2017 அன்று வருகை தருவதை முன்னிட்டு,

## சிறுபான்மையிருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் சந்தித்து தங்களது குறைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள் மற்றும் ஆணைய குழு உறுப்பினர்கள் வருகின்ற 21.07.2017 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்கள். சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளையும் 21.07.2017 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் சந்தித்து சிறுபான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கவும், கருத்துக்களை கேட்டறியவும் உள்ளனர்.

அவ்வமயம் சிறுபான்மையிருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் மாநில சிறுபான்மையினர் ஆணையக்குழுவினரை சந்தித்து தங்களது குறைகளையும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், சிறுபான்மையினர் நல மேம்பாட்டிற்கான தக்க கருத்துக்களையும் தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**